வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 சித்திரை 12 | 24-4-48 சனிக்கிழமை | விச்சு 36

"அவ்வளவு திமிரா அவனுக்கு? பிடித்து அடையுங்கள் கூண்டில்" என்று கர்ஜித்தார் போப். கர்ஜனை, அவருடைய அடியாட்களுக்குக் கட்டளை ஆயிற்று. அவன் சிறை பிடிக்கப்பட்டான். சிறையிலேயே சித்திரவதை செய்யப்பட்டு, வாட்டி வதைக்கப்பட்டு, கண் குருடாக்கப்பட்டு, இரண்டு திங்களுக்குப் பின் சொந்த கிராமத்திற்கு அனுப்பப்பட்டான். அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறக்கூடாது, நண்பர்கள் எவரோடும் பேசக்கூடாது, தன் மாணவர்களைக் காணவும் கூடாது, தன்னந்தனியாக வாழ வேண்டும் என்று கடுமையான கட்டளை. அவன் எழுதிய புத்தகங்கள் அத்தனையும் பறிமுதல் செய்யப்பட்டு, நாஸ்திக புத்தகங்கள்' என்றபட்டி 3 : பொறிக்கப்பட்டு பிறர் வாசிக்கக் கூடாது என்று தடை உத்திரவும் பிறப்பிக்கப்பட்டன.



தன் முயற்சிகள் முறிந்து, ஆராய்ச்சிகள் தடுக்கப்பட்டு, வாழ்க்கை பறிக்கப்பட்ட நிலையில் ஐந்தாண்டுகள் அவன் தனி வாழ்க்கைச் சிறையில் உலவினன், இத்தாலியில், 1640-ல்! பின் செத்தான், கவனிப்பாரற்று. இந்தக் கடுமையான தண்டனையை அநுபவிக்க அவன் என்ன குற்றம் செய்தான் என்று எவரும் கேட்பர். அவன் செய்த குற்றம் உண்மையை (9-ம் பக்கம் பார்க்க)

உரையாடல் :

தேவியாருக்கு வந்த ஐயம்

[சித்திர புத்திரன்]

[அன்னை பார்வதி தேவிக்குத் 'திடீர் சந்தேகம்' பிறந்தது ஓர் நாள். உடனே தம்மை மாலையிட்ட மணாளனைக் கேட்கிறார்கள் ஐயம் தீர்த்து வையும் என்று ஐயன் தந்த விடை அம்மைக்குத் திருப்தி தர இல்லை. எனவே மேலும் ஐயவினாக்களை எழுப்புகிறார்கள் அம்மையார். விளைவு சுவையானதோர் உரையாடல்! அது, இது.]

பார்வதி :—எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்து பலர் காலையிலும், மாலையிலும் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்ளுகிறார்களே அது எதற்காக நாதா?

பரமசிவன் :—கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்திலடித்துக் கொள்ளுகிறார்கள்.

பார்வதி :—ஓ ஹோ, அப்படியா சங்கதி! சரி, அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக்கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், ஏற்றம் இறைக்கிறார்கள், செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள், அடித்துக்கூட தின்றுவிடுகிறார்களே அது ஏன்?

பரமசிவன் :—நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை. நன்றாகச் சாம்பலை பூசிக்கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

பார்வதி :—அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னங்கன்னமாய் அடித்துக் கொள்ளாமல், தடி எடுத்து அடித்துக் கொன்று விடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன் :—கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள்; அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றி கொழுக்கட்டையை வைப்பார்கள்; ஆனால் உயிருடன் காணும்போதோ ஓடிஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக் கேட்டை யாருடன் சொல்லுவது!

பார்வதி:—அதுதான்போகட்டும். தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோடு! சோடு! என்று விரட்டுகிறார்களே அது என்ன காரணம் நாதா?

பரமசிவன் :—கண்மணி, அதுவும் பக்தர்களின் அறியாத்தனம்தான். ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன் மீது சிலர் அருவருப் படுகின்றார்கள் போல்இருக்கின்றது.

பார்வதி ;—என்ன நாதா வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால் மகாவிஷ்ணுவின்வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுத்தமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்த பக்தர்கள் மன்னிக்கும்போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது?

அதுதான் போகட்டும்; நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்ளுவதில்லை? அன்றியும் ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்று விடுகிறார்கள்! இது என்ன அநியாயம்;

பரமசிவன் :—அது அந்த ப
களின்பக்திக்குறைவு. அதற்கு
என்ன செய்யலாம்?

பார்வதி :—நாதா! சரி, சரி
யெல்லாம் பார்க்கும்போது
எனக்கு மிகவும் வெட்கக் கே
டாயிருக்கிறது. நமக்குக் கீழ்ப்
விஷ்ணுவின் வாகனத்திற்கு ம
ரம் உலகத்தில் இவ்வளவு ெ
வழும், அவர் பக்தர்களு
மாத்திரம் இவ்வளவு பக்
இருப்பதும், நமது வாகனங்க
இவ்வளவு மரியாதைக்குறை
நம் மதபக்தர்களுக்கு இவ்வள
திக் குறையும் இருப்பதும் என
வெளியில் தலை நீட்ட முடிய
லையே. தவிர விஷ்ணுவின் ெ
ஜாதியான மகாலக்ஷ்மி கூட
னையே அடிக்கடி என்னைப்
துப் பரிகாசம் பண்ணுகின்
இது தவிர நம்முடைய பக்தா
ளும் பலர் அறிவில்லாமல்
வாகனத்தை மரியாதை செ
மல் இருப்பதோடல்லாமல் விஷ்
வாகனத்திற்கு விஷ்ணு ப
களைப் போலவே கன்னங்க
மாய்ப்போட்டுக்கொண்டுமரியா
செய்கிறார்களே! இது எ
மானக்கேடு! தாங்களே யோ
துப்பாருங்கள்.

பரமசிவன் :—என்ன செய்ய
சகி? தலையில் பிரம்மன் இப்
அவமானப் படும்படியாக விதி
விட்டான். விதியாரை விட்
சொல்பார்ப்போம். என் க
மணி! நீ இதற்காக அழவே
டாம்; உன்னைப் பார்த்தால் எ
கும் அழுகை வருகிறது.

பார்வதி :—சரி, சரி. இதற்
நான் ஒருத்தி அழுவது போதா
கும். இனி நீங்கள் வேறு அ
வேண்டும்! போனால் போகட்
இம்மாதிரி நம் தலையில் எழு
அந்தப் பிரம்மாவைபேசிக்கொ
லாம். வாருங்கள் நம்ம வே
யைப் பார்க்க நாம் போவோம்.

டிக்கைச் சிறு கதை:

சீதையை மணந்த இராவணன்!

[தில்லை—வில்லாளன்]

ஜானகியுடன் வந்து சேர்ந்ர் இராமச்சந்திரன், இராமல விநோத சபாவின் சொந்க்காரர். அவள் அழகியாக ட்டுமிருந்தால், நாடக மேடைல் அப்படிப் பெயர் வாங்கிருக்கமாட்டாள். அவள் ழகி மட்டுமல்ல, சிறந்த டிகை கூட. அவளது நடிப்பு, ண்மையில் எவருக்கும் பிரமிப்பத்தான் தரும். சோக கட்டனுல் பார்ப்பவர் அழுவர்; ன்பச்சுவையானுல் மக்கள் க்களையும் அறியாமல் சிரித்துவர். அத்தகைய உயிர் ப்பு — ஜானகி, நாடகவாலே ஜொலித்திடும் உயிருள்ள சித்திரம்! நடிப்புலகிலே தன் தனியாக தனக்கிணையும், ப்பும் இல்லாது உலவிடும் ர் ஓவியம்! அவள் நாடக மடையிலா தோன்றினுள், ல்ல, அல்ல, நாட்டு மக்களின் தய அடிவாரத்தில் 'கதகளி' டிக்கொண்டிருந்தாள்!

முதலாளி. இராமச்சந்திரக்கு, பிரதம நடிகை ஜானகி ன்மீது ஓரக் கண்ணோட்டம், கலே அவளை வட்டமிட்டார். ல் ஜானகியோ அந்தக்காதல் ம்புகளை அறுத்துவிட்டு னே இயங்கும் வீணையா !

இன்பபுரியில் வதிந்திடும் லிபர்களுக்கு இராம பால தை சபா ஒரு கேளிக்கைக் மாகத்தான் தோன்றியது. ர்கள் நாள் தவறினுலும், கள் தவருது விஜயம் செய ர்கள். அவர்களுக்கு அப்படி ன்றும் நாடகத்தைப் பற்றிய கவலையோ, அக்கரையோ கிடையாது. ஜானகியின் திவ்ய வதன தரிசனம் கிடைத்தால் அது போதும் அவர்களுக்கு! அவர்களிலே ஒருவன் ஜானகிராமன்—அவன் பெயரில் மட்டுமல்ல, உண்மையிலேயே அந்த ஜானகிக்கு ராமன் ஆக எண்ணினுன், திட்டமிட்டான், பல திட்டங்கள் தொடக்கத்திலேயே பட்டுப் போய்விட்டன.

கடைசியில் ஒரு முயற்சி—வெற்றிதான் அவனுக்கு! முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் அன்ருே? ஜானகிராமன் நாடக மேடை நடிகனுன். பிரபல 'வில்லன்' எனப் பெயரெடுத்து விட்டான். இப்படி ஆரம்பித்தான் தனது காதல் வேட்டையை — வேட்டையில் வெற்றி பெற்ருன் வேடன், வீழ்ந்தது அந்தப் பாயாத மான்!

பார்வை — சாதாரணமானது தான்! புன்னகை— நடையெடுப்பின் அடுத்தபடி! "இன்றைக்கு உன் நடிப்பு அபாரம், நான் மூக்கின்மீது விரலை வைத்துவிட்டேன்"—முற்றுகை இறுகுகிறது என்று அர்த்தம் அந்த வார்த்தைகளுக்கு! "இன்று கடற்கரைக்குப் போகிறேன், நீ வருகிருயா?"—இது கேள்வியல்ல; வாள்வீச வாய்ப்பு தேடும் காதல் வீரனின்போக்கு! "கண்ணே, ஜானகி, நீ என் பெயரின் முன்னேமட்டும்ஒட்டிக்கொண்டிருக்கவில்லை; என் இதயக் கோட்டையின் ஏக சக்ரவர்த்தினியே நீதான்"—இதுதான் நேரடித் தாக்குதல்! காதல் போரில் நேரடித் தாக்குதல் நடைபெறுகிற அளவு வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டு விட்டால் பணிவுதான் போரின் முடிவாக இருக்கும். அதுவும் நிபந்தனையற்ற சரணுகதியாக இருப்பதுதான, வாடிக்கை. அந்த வாடிக்கைக்கு விரோதமாக நடந்துகொள்ளவில்லை ஜானகியும். இல்லாவிட்டால் "அன்பரே, என உடல், பொருள், ஆவியை அன்றே, முதன் முதல் மேடையில் சந்தித்த பொழுதே தங்களுக்குத் தத்தம் செய்து விட்டேன்" என்று சொல்வாளா ஜானகி?

பிறகு..."என்னை மாறிய நீங்கள் மணக்க வேண்டும்" என்ருள். "ஆகட்டும் கண்ணே" என்று அட்டியின்றி விடை சொன்னுன். சொன்னுனே தவிர அது அவ்வளவு எளிதான காரியமாக முடியவில்லை. ஏனெனில் நாடகங்களில் மட்டுமே ஜானகிராமன் 'வில்லனே' தவிர, அவனுடைய காதல் வாழ்வில் குறுக்கிடும் எதிரி இராமச்சந்திரனை வீழ்த்தும் பலம் அவனுக்கு ஏது?

ஜானகிராமன் திட்டமிட்டான்...—

அன்று சம்பூர்ண இராமாயணம், பட்டாபிஷேக நாடகம். ஆகவே ஏராளமான கூட்டம், எள் விழவும் இடமில்லை!

கதை வளர்ந்து கொண்டே வந்து சீதையின் சுயம்வரக் கட்டத்தில் வந்து சேர்ந்தது. ஜனக மகாராஜன் மணி மண்டபத்தில் அமர்ந்திருந்தார். மற்ற ஐம்பத்தாறு தேசத்து மன்னரும்

மன்னரும் மருங்கிருந்தனர். ஒரு பெரிய பெட்டியில் சிவ தனுசு வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவராக வில்லையெடுத்து வீரம் பேசி தோற்றனர். தோழியுடன் மணமாலையை ஏந்தி நின்ற சீதையின் சிங்கார முகம் சுருங்கி சுருங்கி விரிந்தது!

இராவணன் வேகமாக சுயம் வர மண்டபத்தில் நுழைந்தான். மக்கள் கைதட்டி வரவேற்றனர். ஆனால் ஐம்பத்தாறு தேசமன்னர்களும் நடுங்கி யொடுங்கினர். ஜனகரின் முகம் சிவந்தது. ஆனால், சீதையின் உதட்டிலே சிரிப்பு தவழ்ந்தது!

"உமது பெண்ணை மணக்க நிபந்தனை என்ன?"

"இந்த சிவதனுசுவைஎடுத்து வளைத்து நாணேற்றி ஒடித்திட வேண்டும்'

"ஒடித்து விட்டால்?"

"அதோ அந்தத் துடியிடை உம்மைத்தழுவுவாள்"

இராவணன்குனிந்தான். விண்ணென்ற ஒலி கேட்டது. பட்டென்றது. இற்று இரண்டாக விழுந்தது அந்த வில்! சபையோர் சிரித்தனர். சிரிப்பு அடங்குவதற்குள் சீதை ஓடோடியும் சென்று மணமாலையை இட்டாள். தனது கரத்தால் அவள் இடையைப் பற்றி இறுகத்தழுவினான்—சிரித்தான்—சிரித்தாள்—சீதையை மணந்தான் இராவணன்!

"திரையை விடு, திரையை விடு"

"ஐயோ யாரோ இழுத்துக் கட்டி விட்டார்களே!"

ஜனகன், முடி, உடைகளைத் களைந்துவிட்டு ஓடிவந்தான். அதற்குள் கூட்டம் குழப்பமாகி விட்டது.

ரௌடி ரங்கனும், அவனுடைய அடி ஆள் சோமுவும், கத்திக் குத்துக் கண்ணுசாமியும் மேடைக்கு வந்தனர். அவர்கள் போட்ட கூச்சலில் கூட்டம் அடங்கி அமைதியாக அமர்ந்தது. அவர்கள் மூவரும், மகாராஜாதி ராஜ ஜனகனை நின்றுகொண்டிருந்த இராமச்சந்திரனை அழைத்தனர். அவர் மேடையின் மத்தியில் நின்றார்.

"நீர் என்ன சென்னீர்?"— ரௌடியின் கேள்வி இது!

"எப்போது?" — இராமச்சந்திரன் சந்தேகம்!

"இராவணன் கேட்டபோது....!"—கையாள் சோமுவின் விளக்கம்!

"வில்லை முறித்தால், சீதை கிடைப்பாள் என்று"—முதலாளியின் நடுங்கிய குரலில் வந்த பதில்!

"சரி, சொன்னபடி செய்யும்" முதலாளி இராமச்சந்திரர் விழித்தார். ஆனால் அந்த மூவரின் பெயர் கேட்டாலே நடுக்கம். ஆகவே மெதுவாகச் சொன்னார், அதுவும் பயந்துகொண்டே!

"கதைப்போக்கு மாறிவிடும். புண்ணிய கதை, பாவம். சிறு தவறு நடந்துவிட்டது. மன்னிக்கவேண்டும்"

"ஜனகன் சொன்ன சொல் தவறியதாக முடியக் கூடாதல்லவா, அதற்காகத்தான் சொல்கிறோம்."

மூவரும் சிரித்துக்கொண்டே கூறினர். பார்த்திருந்த கூட்டம் பழையபடியும் வெடிப்புச் சிரிப்பை வீசியது.

ஜனகர் சீதையின் கரத்தைப் பிடித்து இராவணன் கையில் கொடுத்தார். மேளம் முழங்கியது. கூட்டம் கட்டுக்கு மீறி சிதறியோடியது. மீண்டும் குழப்பம் வந்துவிட்டது. திரை கிழிந்தது. நடிகர்கள் ஓடினர். வாத்தியக்காரர்கள் மறைந்தனர். மின்சாரவிளக்குகள் உடைந்தன.

பத்து தலைகளை கையால் தூக்கிக்கொண்டு, மற்றொரு கையில் சீதையைப் பிடித்துக்கொண்டு ஓடி வந்தான் நாடக மேடை இராவணன். அந்த இரவில் கட்டை வண்டிகள் அந்த சா வழியே போய்க்கொண்டிரு தன. அவர்களில் ஒருவனிட பேரம் பேசி வண்டியில் இரு ரும் ஏறிக்கொண்டனர்.

"இராவணா, பாதகா, என் எங்கே கொண்டு செல்கிறாய் என் பர்த்தா இராமச்சந்திர உன்னை விடமாட்டார்"

"சீதா தேவி, உன்னை இந் புஷ்ப விமானத்தில் ஏற்றி கொண்டு எங்குப் போகிறே என்று சொல்லவேண்டுமே உன் பர்த்தாவா, பிதாவல்ல இராமச்சந்திரர்! அவரை க னித்துக்கொள்ள என் நண்ப கள் மூவர் இருக்கின்றனர்."

"அடியாளை அசோக வன திற்கா அழைத்து செல்கிறீ சுவாமி!"

"அசோக வனத்திற்கல் கண்ணே, அது அந்தக் கம்ப எழுதிய கட்டுக்கதை. நா உன்னை அழைத்துச் செ வது வாழ்க்கை வனத்தி இருவரும் ஓடி விளையாட இருவரும் சிரித்தனர்!

சீதை "இராவணன்" மார்பி சாய்ந்தாள், ஜானகி ராமன் பெயரை நிலை நாட்டினான் கட்டைவண்டியின் கிரீச் சத்த தில் "இச்" சென்று எழு வேறொரு சத்தம் கேட்காம போய்விட்டது!

புதிய இதழ்! ★ வெளிவந்துவிட்ட

வாழ்வு

[தனிப்படி அணா 2]

இந்த இதழில்!

அறிஞர் அண்ணாத்துரையி சிவகங்கைப் பேச்சு—A.S.A.ச யின் எழுத்தோவியம்—மற்றும்

திருச்சி முதலிய இடங்களுக்கு விற்பனையாளர்கள் தேவை!

★

வாழ்வு அலுவலகம்
புதுக்கோட்டை.

தூத்துக்குடி அழைக்கிறது! ★ தோழர்களே! திரண்டு வாருங்கள்!

திராவிடர் கழக 18-வது மாகாண மாநாடு!

வ. உ. சி மைதானம்! ★ அர்ச்சுனன் பந்தல்!

மே 8, 9 சனி ஞாயிறுகளில்

தலைவர் :
பெரியார் அவர்கள்

திறப்பாளர் :
தெ. பொ. வேதாசலம்

கொடி ஏற்றுபவர் :
கே. கே. நீலமேகம்

படத் திறப்பாளர்கள் :

திராவிடநாடு :
சி. என். அண்ணாதுரை

நாகம்மையார் :
இந்திராணி பாலசுப்பிரமணியம்

செல்வம் :
கே. வி. அழகர்சாமி

தாளமுத்து நடராசன்
ஏ. பி. ஜனார்த்தனம்

★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
தலைமையில்
நடிகவேள் எம். ஆர். ராதாவின்
"சர்வாதிகாரி" நாடகம்

★

அணி அணியாய் வாருங்கள்! திட்டம் தீட்டுங்கள்!
வருங்காலத் திராவிடத்தை உருவாக்குங்கள்!

சா. வி. அ. வள்ளிமுத்து,
எஸ். நீதிமாணிக்கம்,
வரவேற்புத் தலைவர்கள்.

கே. வி. கே. சாமி,
செயலாளர்,

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று எண்ணினான். எண்ணினாளே அன்றி, அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை! பார்த்துக்கொண்டே பதறும் உள்ளத்தோடு, ஆடாமல் அசையாமல் நின்றிருந்தாள். இருவருக்குமிடையே பலத்த போர் நிகழ்ந்தது. பல குத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். முடிவில் முரடன் வெற்றி பெற்றான். கத்தி அவன் கையில் கிடைத்து விட்டது! இனி தீர்த்து விடலாமென்று துள்ளிக் குதித்து, சிவனின் மேல் பாயத் தொடங்கினான். உடனே, அவன் முதுகில் பலமான ஒரு அடி விழுந்ததால் திடுக்கிட்டு, அசைவற்று நின்று விட்டான். அவன் கையிலிருந்த கத்தியைக் கண்ணன் வெடுக்கென இழுத்துக் கொண்டான். புதியதாக ஒருவன் வந்து விட்டான் என்பதை அறிந்ததும், முரடன் ஓட ஆரம்பித்தான். கண்ணன், அவனைப் பின் தொடர்ந்தான்.

சிவன், மனோரமாவைப் பார்த்தான். அவள் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து கிடந்தாள். பதை பதைக்கும் உள்ளத்தோடு அவளை வாரி எடுத்தான்.

"கண்ணா! ஓடாதே! நில்! இங்கே வா!' என்று உரக்கக் கூவினான் சிவன். கண்ணன் திரும்பி ஓடிவந்தான். மனோரமாவின் நிலையைக் கண்டு, அவனும் கவலைப்பட்டான்.

"நீ எப்படிக் கண்ணா இங்கு வந்தாய்!"

"நேரமாகிறது, உங்களை விரைவாய் வரும்படிச் சொல்லியனுப்பினார்கள் அம்மா. வரும்பொழுதே, குளத்தில் யாரோ கத்துவதைக் கேட்டு வேகமாக ஓடி வந்தேன்......"

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

24—4—48 சனிக்கிழமை

பாசறை அழைக்கிறது! வீரர்களே வாருங்கள்!

அதோ, தூத்துக்குடியில், தென் பாண்டி நாட்டில், திராவிட இளந் தளபதிகள் பெரியார் ஆணைப்படி பாசறை அமைத்துவிட்டனர். படை வீடு எழுப்பிவிட்டனர். போர்க் கருவிகளும் குவித்துவிட்டனர். போர் முரசும் கொட்டிவிட்டனர். வீரத் திராவிடரை விரும்பி அழைக்கின்றனர் வருக வருக என. திராவிடர்களே புறப்படுங்கள், தோழர்களே புறப்படுங்கள்.

பாசறையின் அன்பழைப்பு பிறந்துவிட்ட பிறகு, திராவிடர்தம் போர்முரசு கொட்டப்பட்டுவிட்ட பிறகு, போராட்டத்திற்கு எங்கள் பட்டாளங்கள்! தயார் என்று பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தளபதிகள் போர்த் தலைவருக்கு அச்சாரம் தந்துவிட்ட பிறகு, போர் வீரர்கள் பாசறை நோக்கிச் செல்வதன்றி வேறு என்னசெய்ய இருக்கிறது? தாய்நாட்டின் அழைப்பைவிட, பெற்ற பொன்னாட்டின் அழைப்பைவிட, இன்பத்திராவிடத்தின் இனிய அழைப்பைவிட, வருங்காலத் தமிழகத்தை உருவாக்கும் அறப்போரில் குதிப்பதற்கான புத்தம் புதியதோர் புனிதமான அழைப்பைவிட சிறந்த அழைப்பு ஒரு சமுதாயத்தையே மாற்றி அமைத்து மறுகோலம் செய்து தீரவேண்டிய மகத்தான பொறுப்பை தாமே மனமுவந்து ஏற்றுக்கொண்டுள்ள மாவீரர்களுக்கு வேறு என்ன கிடைக்கமுடியும்? இத்தகைய நெருக்கடியான நேரத்தில் பாசறைப் பயணம் செய்வதை விட வேறு வேலைதான் அவர்களுக்கு ஏது? ஆகவேதான், உரிமையோடும், படைவீரர்தம் கடமையுணர்ச்சியை நினைப்பூட்டும் நல்ல நோக்கத்தோடும் தூத்துக்குடி தளபதிகள் திராவிட இளஞ் சிங்கங்களை அழைக்கின்றனர். சிங்கங்காள்! உங்கள் தனி வாழ்க்கை எனும் இருட்டுக் குகையைவிட்டு தூத்துக்குடி என்ற வெட்ட வெளியிலே வந்து வீர கர்ச்சனை செய்யத் தவறாதீர்கள்—தவறாதீர்கள்.

சிங்க ஏறுகள் மறைந்தன என்றெண்ணி சிறுநரிகள் நாட்டிலே ஆர்ப்பாட்டம் செய்கின்றன. அந்தக் குள்ளநரிகளின் கொட்டம் அடங்க, நீங்கள், உங்கள் கையிருப்பைக் காட்ட எழுங்கள். உறங்கியது போதும். உடனே விழியுங்கள். கண்களைத் திறவுங்கள். நாட்டை நோக்குங்கள். வாழ்ந்த தமிழகத்தின் முதுகு வளைந்திருப்பதைப் பாருங்கள். பாராண்ட இனத்தவர்கள் பஞ்சை பராரிகளாய் உலவுவதைக் காணுங்கள். சேரன் சந்ததியினர் வாழ வழியின்றி வாழ்க்கைக்கொரு வழி தேடி அலைவதை நினையுங்கள். சோழனின் கூட்டத்தவர் சொந்த நாட்டிலேயே சீரழிந்து சிதைவதையும், பாண்டியனின் பரம்பரையினர் வேற்று நாடுகளிலே சென்று ரப்பர் தோட்டங்களிலே

யும் சவுக்குக்காடுகளிலேயும் க
பல் தொழில்களிலேயும் காட்
மிராண்டி மக்களிடையேயு
உழன்று உழன்று, வாழ்க்
யிலே வேதனை என்பது தவி
வேறொன்றையும் காணாது, இன்ப
என்றோர் பொருள் உலகிலே உண்
என்பதைக்கூட உணராது, வா
வாவது மாயம் இது மண்ணுவ
தின்னாம் என்ற பாசுரத்தை
புறநானூறாகவும், பாபூலக
பொய்யே பரமபதம் போ எனு
சாக்குருவி வேதாந்தத்தையே சில
பதிகாரமாகவும், காயமே இ
பொய்யடா வெறும் காற்றடைத்
பையடா என்ற கவிதையை
கலித்தொகையாகவும், என்ன
ஏன் படைத்தாய் இறைவா என்
வாசகத்தையே வாழ்க்கை மந்தி
மாகவும் கொண்டு வதைபடுவ
யும் சற்றே எண்ணிப் பாருங்க
அந்த ஆயிரமாயிரம் தமிழர்க
கடல் கடந்து சென்று, பெற்
தாயை தந்தையை மறந்து, க
டிய மனைவியை மக்களை மறந்
உற்ற நண்பர்களை உறவினரையு
மறந்து, வாழ்க்கைப் பயணத்தி
பாலைவனங்கள் உண்டே தவி
பூஞ்சோலைகள் கிடையாது என்
எண்ணத்திலேயே மூழ்கியவர்
ளாய், நாளும்நாளும் துயர்க்கட
லேயே நீந்தி, வேதாந்தத் து
பையே பிடித்து, வறுமைப் ப
கிலேயே உலவி, துக்கபுரிகளை
கண்டு, உள்ளம் உடைந்
உணர்ச்சி வறண்டு, வயி
காய்ந்து, உடல் தேய்ந்து, உன்ம
தர்களாக—சோகத்தின் பிம்பங்
ளாக—நடமாடும் பிணங்களாக—
உயிருடன் உலவும் எலும்புக் கூ
ளாக வாழ்கிறார்களே—அல்
தவறு! சித்திரவதைக்கு ஆளா
சிறுமைப்பட்டு மாள்கிறார்களே—
இந்த அவல நிலை இனியும் இருக்
லாமா, இருக்கவிடலாமா, இருக்
விடுவது தமிழ் இனத்தின் பண்பா
டிற்கே இழுக்கு அல்லவா, இ
அழியாத நெடும் பழியைத் துடை
பது நம் முதற் கடமை அல்லவ
இந்தப் பழியைத் துடைப்பதைவி
—அந்த மக்கள் வாழ வழி செ
வதைவிட—அவர்கள் சிந்தும் கண்
ணீர் ஆறெனப் பெருகி ஓடுவதை
தடுப்பதைவிட—அதற்கான அற
போர் தொடுப்பதைவிட நம்முடை
நினைப்பும் நேரமும் வேறு பிர
சினைகளில் செல்லலாமா, வேற்

டு வீரர்களை இங்கே சரண்ட
மதித்துவிட்டு — டாடாக்களுக்
பிர்லாக்களுக்கும் டால்மியாக்
க்கும் வால்சந்த் ஹீராசந்த்
க்கும் வேட்டைக் காடாக
க்க திராவிடத்தை அனுமதித்து
டு—திராவிடத்துச் சேய்களை
தேசங்களில் துக்க புரிப் பய
செய்ய நாம் பார்த்துக்கொண்
க்கலாமா, இதைக் கண்டு வருங்
ச் சந்ததியினர் நம்மை
ணி கைகொட்டி நகைக்க
ட்டார்களா, இதற்கொரு பரி
ம்தேடவேண்டாமா, பரிகாரம்,
ற்கொரு போராட்டத்தைக்
ண்பதிலேதான் உண்டு என்று
மானல் அந்தப் போராட்டத்
கு நம்மை நாம் தயார் செய்து
ள்ளவேண்டாமா? திராவிட
ங்காளைகளே, கல்லூரித்
ழர்களே, கற்றறிந்த நண்பர்
ள, மாணவ மணிகளே, வீரர்
ள, வீராங்கனைகளே, அன்னை
ரே, ஆசிரியரே, உங்கள் எல்
லரையுந்தான் கேட்கிறோம்,
விடத்தின் குரல் வளையை
றிக்கும் வடநாட்டுக் குபேரர்
ன் கொட்டத்தை அடக்கி,
லி தர்பாரிலிருந்து விடுபட்டு,
விட சோஷலிசக் குடியரசு
டு எல்லார்க்கும் எல்லாமும்
ப்பதான இடம் நோக்கி இந்தத்
னாட்டை அழைத்துச் செல்ல
ண்டாமா, அப்படி அழைத்துச்
ல்லாமுன்னர் சிலோனிலும் சிங்
பூரிலும் பர்மாவிலும் ஆப்ரிக்கா
ம் மோரிசிலும் பிஜிதீவுகளிலும்
த்தக் கண்ணீர் வடித்து நிற்கும்
ழர்களின் வாழ்க்கையிலே
ன்றல் நுழைய வழி ஏது? சிந்
துப் பாருங்கள். சிந்தனைக்குப்
கு தாந்துக்குடி வாருங்கள்.
ட்டம் தீட்டங்கள். திராவிடம்
ழ வழி காட்டுங்கள்.

திராவிடர்தம் இன இழிவு நீங்க,
ண்டல் தொலைய, சூதுக்காரர்க
வஞ்சக வலைகள் அறுபட,
மை இறுக்கிப் பிணித்துள்ள
ாட்டு விலங்குகள் பொடிபட,
ழர் கழனிகளிலே நுழைந்து
ழப் பயரைக் கொத்தித் தின்
வடவர்கள் வந்த வழி பார்த்து
டு போக, ஒரு மார்க்கம்—ஒரு
—ஒரு திட்டம்—ஒரு முறை
த்தீரவேண்டிய அவசியம்
எந்த நாளையும் விட இன்று
மிகுந்துவிட்டது. அரசியல் ஆக்க மன்றம், திராவிடம் விரும்பாதிருந்துங்கூட, அதனை வலுக்கட்டாயமாக, இந்திய யூனியன் என்ற சங்கிலித் தொடரில் இணைத்துவிட்டது. அந்தச் சங்கிலித் தொடரிலிருந்து—அதைச்சங்கிலித் தொடர் என்பதை விட சிறைச்சாலை என்பது மிக மிகப் பொருந்தும்—திராவிடம் விடுபட முடியாமல் இருக்க என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் அந்த மன்றம் அவசர அவசரமாக, அடுக்கடுக்காக, ஆனல் ஆரவாரமின்றி செய்யத் தொடங்கிவிட்டது. இந்தியாவின் எதிர்கால அரசியல் சட்டம் என்ற பெயரில் அந்த மன்றம் வகுத்துள்ள திட்டத்தின்படி 'மிச்ச இந்தியா' என்று இன்று அழைக்கப்படும் இந்திய யூனியனின் எல்லைக்குட்பட்ட துணைக் கண்டப் பகுதியிலிருந்து எந்த நாடும் பிரியவே முடியாது என்று அழுத்தந் திருத்தமாக அறிவிக்கப்படுகிறது. "நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்" என்று எழுச்சிப் பாசுரம் இசைக்கின்ற இன்பத் திராவிடத்தின் உரிமைக் குரலை ஒடுக்கவே சட்டத்தின் பெயரால் இந்தச் சூது செய்யப்பட்டுவிட்டது. எப்படி வெள்ளையனே வெளியேறு என்று இந்தியர்கள் கூறுவதே ராஜத்துவேஷம் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சட்டப் புத்தகங்களைப் புரட்டிக் காட்டிக் கூறிவிட்டு, அந்தக் குற்றத்திற்குப் பரிசாக இந்தியர்கள் மீது துப்பாக்கிக் குண்டுகளை வீசிற்றே, அதுவே போலத்தான் டில்லி ஏகாதிபத்தியமும் "வடநாட்டுக் கொள்ளையரே, டில்லி சலோ!" என்று நாம் கூறுவதையும் ராஜத் துவேஷம் என்று கூறி, நம்மைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னல் தள்ளுவதற்கு மட்டுமல்ல—நம்முடைய பிரிவினை இயக்கத்தையே ஒடுக்குவதற்கும் வசதியாக இருக்கும்படி அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தீட்டி அதை நாட்டு மக்கள் முன் நீட்டியிருக்கிறது—தைரியத்தோடு! திராவிடர்கள் ஏமாளிகள், ஆகவே அவர்கள் இந்தச் சூதினை உணர மாட்டார்கள் என்ற நச்சு நினைப்போடு! உணர்ந்தால்தான் என்ன—நம்மிடமோ சர்வ வல்லமை பொருந்திய சர்க்கார் இருக்கிறது—அது இருக்க நமக்குப் பயம் ஏன் என்ற நெஞ்சத் துணிச்சலோடு! அந்த நெஞ்சுத் துணிச்சல், திராவிடர்தம் உரிமைப் போர் வலுத்தால் தங்கள் ஆதிக்கம் குறையுமே, தங்கள் நாட்டவர் சுரண்டுவதற்கென்றே அமைந்துள்ள தென்னடு தங்கள் பிடியை விட்டுத் தப்பிச் செல்லுமே, ஆமதாபாத்தும் பம்பாயும் ஷோலாபூரும் குஜராத்தும் தத்தம் செல்வம் சுருங்கி, சுகபோகம் குறைந்து, சுருண்டுபோக நேருமே என்ற அச்சத்தின்பாற் பிறந்தது. தென்னடு பிரிந்தால் வடநாட்டு வணிக வேந்தர்கள் மிக முக்கியமான 'மார்க்கட்'டை இழந்துவிட்டனர் என்று பொருள்; இருக்கும் பிர்லாக்கள் வளர முடியாது என்று பொருள்; அதுமட்டுமல்ல, இனி புதிய பிர்லாக்கள் தோன்ற முடியாது என்றும் பொருள். ஆகவேதான், தெற்கு தன்னுடைய ஆதிக்கத்தை விட்டு தப்பிச் செல்லக் கூடாது என்பதில் வடக்கு இவ்வளவு கவலை செலுத்துகிறது. அதனலேயேதான் சட்டம் என்ற முள்வேலியை மிக உயரமாகவும், எளிதில் எவரும் அசைக்க முடியாத முறையிலேயும் திராவிடத் திருநாட்டின் நான்கு எல்லைகளிலும் எழுப்பிவிட்டது வடநாடு. திராவிடத்தினுடைய எதிர்காலம் இருண்டு போகாமல் இருக்கவேண்டுமானல் ஒன்று, இந்த முள்வேலியை நாம் முறித்துத் தள்ளவேண்டும். அல்லது இந்த முள்வேலியை விட்டு திராவிடம் தப்பிச் செல்ல வழி தேடவேண்டும். இந்த இரண்டும் தவிர இன்னெரு வழியும் உண்டு. அது, பாம்பாட்டி, பாம்பினுடைய நச்சுப் பற்களை மட்டும் பிடுங்கி எறிந்துவிட்டு, பாம்பை தன் கூடையிலே விளையாடவிட்டு வேடிக்கை காட்டுகிறனே அது போன்றது. அந்த வழிதான், முள்வேலியை முறிப்பதிலேயோ, அதனின்று தப்பிச் செல்லும் மிக ஆபத்தும் கடினமுமான செயலிலேயோ ஈடுபடாமல், அந்த முள்வேலியை இருக்கும் இடத்திலேயே இருக்க விட்டுவிட்டு அதிலிருக்கும் முட்களை மட்டும் கத்தரித்து எடுத்துவிடுவது. அல்லது அந்த முட்களின் முனையை மட்டும் மழுங்கச் செய்துவிடுவது.

சட்டம் என்ற முள் வேலியை முறித்துத் தள்ளுவது, அதினின்றும் தப்பிச் செல்வது, அந்த முள் வேலியை பல்லிழந்த பாம்பாக மாற்றிவிடுவது என்கிற இந்த மூன்று வழிகளிலே எது இன்றைய சூழ்நிலைக்கும் சர்க்கார் நிலைமைக்கும் நம்முடைய திறத்திற்கும் பொருத்தமானது என்பதை முடிவு கட்டவேண்டிய பொறுப்பும், முடிவு கட்டிய பிறகு அதனை எப்படி நிறைவேற்றுவது என்பதைத் திட்டவட்டமாக மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டிய கடமையும் தூத்துக்குடி மாநாட்டிற்கு உண்டு. ஆகையால்தான் அது மிக மிக முக்கியமான மாநாடாகவும் மிக முக்கியமான நேரத்தில் கூடுகிற மாநாடாகவும் கருதப்படுகிறது.

சென்னை, திருவாரூர், சேலம், திருச்சி, தூத்துக்குடி! இவை வெறும் ஊர்ப் பெயர்களல்ல! திராவிடர் இயக்கத்தின் ஆபத்தான பயணத்தில் காணப்படும் ஐந்து மைல் கற்கள். ஐந்து மைல் கற்கள் மட்டுமே அல்ல, ஐந்து திருப்பு மையங்கள்! (Turning points). ஐந்து திருப்பு மையங்கள் மட்டுங்கூட அல்ல, திராவிடர் இயக்கத்தின் ஐவகை வளர்ச்சியைக் குறிப்பிடும் ஐந்து அடையாளச் சின்னங்கள்! நீண்ட இரவிற்குப் பிறகு, காலைக் கதிரவன், கீழ்த்திசை வானத்தில் தோன்றி, செங்கதிர் ஒளியை எங்கணும் பாய்ச்சத் தொடங்கியதை, காலை மலர்ந்ததை, மாந்தரெலாம் தங்கள் கண் மலர்ந்தே நடமாடத் தொடங்கியதை, கதிரவன் வருகை கண்டு குவலயம் களித்ததை நினைப்பூட்டும் இயற்கைக் குறிப்புகள்! எவற்றை மறந்தாலும் திராவிடர்கள் இவற்றை மறக்க முடியாது என்று சொல்லத்தரும் பெற்றி வாய்ந்த ஐந்து நினைவு அலைகள்!

சென்னையில், வெள்ளி முளைத்தது. திருவாரூரில் கோழி கூவிற்று. சேலத்தில் பொழுது புலர்ந்தது. திருச்சியில் உதய சூரியனின் செங்கதிர் ஒளிகள் வான்மிசை தோன்றி வையகத்திற்கு விளக்கம் தந்தன. காலை மலர்ந்தது கண்ட மாந்தர் தங்கள் கண் மலர்ந்தே நடமாடத் தொடங்குகின்றனர்— தூத்துக்குடியில்! பொழுது புலர்ந்தது என்பதை அல்ல, புலர்ந்த பொழுதிலே, மக்கள், சோம்பி நிற்கவில்லை— சுருண்டு படுக்கவில்லை — வீண் பொழுது போக்கவில்லை — உன்மத்தராக இருக்கவில்லை—உழைப்பின் உருவங்களென உறுதொண்டு செய்யப் புறப்பட்டுவிட்டனர்— தத்தம் பணியாற்றத் தொடங்கிவிட்டனர் என்பதைத்தான் தூத்துக்குடி நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

1939ல் **சென்னையில்** கூடிய மாகாண திராவிடர் மாநாட்டிலே தான், திராவிடர் இயக்கம், மிட்டா மிராசுகளின் சுகபோகத்திலிருந்து விடுபட்டு அன்னக் காவடிகளின் அன்பை பரிபூரணமாகப் பெற்ற அந்த அஞ்சாத நெஞ்சுபடைத்த மாவீரர் பெரியாரின் காலடியில் வந்து வீழ்ந்தது. பெரியார் அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக் கோட்டத்தில் இருந்தார். அவர் உள்ளே! மாநாடு வெளியே! மக்கள் மலர் மாலையைச் சூட்டினர் அந்த தலைவர் பிரானுக்கு! அல்ல—அவர் சிறையில் இருந்ததால் அவருடைய பீடத்தில் இருந்த அவருடைய உருவச் சிலைக்கு! ஜஸ்டிஸ் கட்சிக்கு அவர் தலைவரானார். சிறையிலே அவர் இருக்க, வெளியிலே மாநாடு நடந்தது, அவர் தலைமையில்! பார்த்தனர் சீமான்கள், மிரண்டனர், பலர் பதுங்கினர், பலர் ஓடியே போயினர், ஒரு சில குமாரராஜாக்கள் மட்டும், கட்சி, பிறகு ஓர் நாள் தம் காலடியில் வந்து விழும் என்று எண்ணிக்கொண்டு உள்ளே இருப்பதாகப் பாவனை பண்ணினர். ஆனால், கட்சி, அந்

தூத்துக்குடி மாநாடு

—

பலருடைய வேண்டுதலையும் வசதியையும் முன்னிட்டு

மே 8, 9 சனி ஞாயிறுகளுக்கு

மாற்றப்பட்டுவிட்டது.

மாநாடு இந்தத் தேதிகளில் கண்டிப்பாக நடைபெறும்.

தப் பாவனை மந்திரங்களை அ
ளவும் பொருட்படுத்தா
மாளிகை உச்சியிலிருந்து
மேட்டிற்கு வந்துவிட்டது.
டுக்குடி மக்கள், இனி இந்தக்
நமக்குச் சரிப்படாது எ
வெளியேறி விட்டனர்.
நேரத்தில், ஆயிரம் ஆயிரமாக,
விடமக்கள்— பாட்டாளிகள்—
வர்கள்—ஆலைத் தொழிலாளிக
மாணவர்கள் — வாலிபர்
உள்ளே நுழைந்தனர். அந்த
யேற்றமும், இந்த நுழை
தொடர்ந்து நடந்து கொண்
இருந்தது. **திருவாரூர்** இடைம
வந்தது. கோபுரம் சரிந்து குப்
மேடு உயர்ந்திருக்கக் கண்ட
யார், இதுதான் சமயம்
றெண்ணி, திராவிட நாட்டுப்
வினையே ஜஸ்டிஸ் இயக்கத்
இலட்சியம் என்ற தீர்மான
அங்கு நுழைத்தார். இது
பெனக் கைத்தது கட்சியில் மி
மீதியாக இருந்த கனதனவா
ளுக்கு. ஆனால் தேனென இனி
பெரியாரைச் சூழ இருந்த வா
பட்டாளத்திற்கு. திருவா
மாநாடு 1941ல் நடந்தது. தி
ரூருக்குப் பிறகு "லேடீஸ் அ
ஜெண்ட்ல்மென்கள்" கட்சி
விரல்விட்டு எண்ணக்கூடிய
வுக்குத்தான் இருந்தனர்.
கண்ட பூனைகள் அல்லவா அ
ஆகவேதான் இன்னமும்
யால் ஏதேனும் "பசை" கி
காதா என்று உறியைத் த
தாவிப் பார்த்தன. சேலம்
ஆசையிலே மண்விழச் செய்
சேலத்துப் பாசறையில் த
அண்ணா அவர்கள் கொண்டு
பட்டம்—பதவி மறுப்புத் தீ
னம் அந்த "மிச்சம் மீதி"
பிடரியில் கால்பட ஓடிடச்
தது, கட்சி பாட்டாளிக
மேடையாகப் பரிபூரணமாக
விட்டது அந்த நாள்! "சேல
ஜஸ்டிஸ் கட்சியை திராவிடர்
கமாக்கிற்று; பிற்போக்குச்
களை கிட்டே நெருங்க விட
விரட்டி விரட்டி அடித்தது;
புத்தியாளரையும் வர்ணாஸ்ரம
லரசுக்குக் கட்டியங் கூறும்
ணியவான்களையும் பார்
"சற்றே விலகி இருப்பீர் சுகு
காள்" என்று கூறிவிட்டது;
பூசையே ஜன்ம சாபல்யம் எ
மந்திரம் ஜெபித்து வந்த சுகு

ம், சுந்தர சொரூபிகளும், உள்
ந்தே வளைதோண்டும் உலுத்
ளும், கூட இருந்து கழுத்த
தும் கசடர்களும், பதவிப் பித்
ளும், அவர்களுக்குப் பராக்
கூறி வாழ்வது தவிர வேறு
து வாழ்க்கைப் பணி புரியாத
ண்ணிய சிலர்'' களும் அன்று
சியை விட்டு விலக்கப் பட்ட
, விலகிய மறுகணம், கட்சி,
க்கம் ஆயிற்று. திராவிட நாட்
லயே வேறு எந்தக் கட்சிக்கும்
லாத அளவு மக்கள் ஆதரவு
விடர் கழகத்திற்குத் திரண்டு
ருகிற்று. ஊரெங்கும் நாடெங்
திராவிடர் கழகக் கிளைகள்!
டிதொட்டி யெங்கும் இன
ர்வு முழக்கம்! வாலிபர் உள்
தோறும் திராவிட நாட்டுப்
!தமிழகத்தின் மூலை முடுக்குக
எல்லாங்கூட பிரிவினை முர
லி! திராவிட நாடு திராவிட
கே, என்ற இலட்சிய கீதம்
சக்கப்படாத இடம் எங்கு
லை என்னும்படியான நிலை!
4 ஆகஸ்ட்டில் ''சேலம்'' நடந்
, 1945 செப்டம்பரில் திருச்சி
டு அந்த சேலத்து மறும
ச்சியை நிரந்தர கீதமாக்கிறது.

சலத்தில் நடைபெற்ற புரட்சிக்
திட்டமான உருவமும் தெளி
ன பாதையும் வகுத்துத்
ப்பட்டன திருச்சியில். திராவிட
தாயத்தின் இழி நிலையைக்
க்க கறுப்பு நிறமும், அந்த
லைத் துடைக்க எழுந்த புரட்
யக் குறிக்க சிகப்பு நிறமும்
ர்ந்தெடுக்கப்பட்டு, கருப்புச்
நிலையில் சிகப்பு வட்டம்
றிக்கப்பட்ட கொடியை திராவி
உள்ளத்தில் எல்லாம் ஏற்றிற்று
ச்சி மாநாடு. திராவிட இனம்
றளவும் அடைந்து வரும்
லை திராவிடர்க்கும் பிறர்க்
நினைப்பூட்ட கருப்புச்
டை அணியும் வழக்கமும்
றுதான் பிறந்தது.

ருச்சி முடிந்தது—தூத்துக்குடி
க்குகிறது. காலை மலர்ந்தது
க்கள் பணி தொடங்குகிறது.
பொழுது புலர்ந்தது—புது வாழ்வு
திட்டம் தீட்டும் பணியும்
தச் செயற்படுத்தும் கடமை
திராவிடர்க்கு ஏற்படுகிறது.
த்துப்பாசறையில் அணி அணி

யாகத் திரண்டு கூடி சந்தர்ப்பவாதிகளை விரட்டி நாம் பெற்ற வெற்றி திருச்சிக் கோட்டை வெளியில் நிலைநாட்டப் பட்டது. இனி அந்த வெற்றியையும் வெற்றியினுல் ஏற்பட்ட விழிப்பையும், நாட்டிலே ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு, புதிய தமிழகத்தை—கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதினுல்— இன்பத் திராவிடம் என்னும் இலட்சிய மாளிகையை நாம் எழுப்பியாக வேண்டும். அந்தக் கட்டிடத்திற்குரிய கால்கோள் விழாவே தூத்துக்குடி மாநாடு.

கப்பலோட்டிய மாவீரர் **சிதம்பரனர்** பெயரால் அமைந்துள்ள மைதானத்தில், நம் அருமை **அர்ச்சுனன்** பந்தலில், தாழ்ந்த தமிழகத்தை தலைநிமிரச் செய்த புரட்சித் தலைவர் **பெரியார்** தலைமையில், இளைஞர் ஏறு **அண்ணுதுரையின்** வழிகாட்டுதலுடன், தளபதிகள் வேதாசலம் நீலமேகம் குருசாமி அழகர்சாமி ஜனர்த்தனம் போன்ருர் புடை சூழ தூத்துக்குடியில் மே 8, 9, தேதிகளில் பாசறைக் கூட்டம் நடைபெறுகிறது. தோழர்களே, வரத் தவருதீர்கள். தவறிவிட்டு, பிறகு, வராமற் போனேமே என்று எண்ணி ஏங்காதீர்கள். ஓடோடி வாருங்கள். வந்து அணிவகுப்பில் கலந்து நில்லுங்கள். புரட்சிக் கொடி ஏந்துங்கள். பொன்னை புது வாழ்வு பெற்றுலன்றி உருவிய (அறிவு) வாளை உறையில் இடோம் என்று சூளுரையுங்கள். வாழ்ந்தால் திராவிடர் அனைவரும் வாழ்வோம், இல்லையேல் அனைவரும் ஒருமுகமாக வீழ்வோம் என்று சபதம் கூறுங்கள். பெற்றே தீருவோம் திராவிட நாட்டை என்று ஓங்கி முழங்குங்கள்.

மே 8, 9 — இவை திராவிடர் இயக்க வரலாற்றில் மிக முக்கியமான இருநாட்கள். இதை உங்கள் உள்ளத்திற்குச் சொல்லி வையுங்கள்.

பாசறை அழைக்கிறது, வீரர்களே வாருங்கள்!

வாருங்கள், வாருங்கள், கட்டாயம் வாருங்கள்!

தாழ்வு மனப்பான்மை

[ஆக்கம்: முல்லை முத்தய்யா. நகைச்சுவை அரசர் முன்னுரையுடன் கூடியது. விலை 0-12-0 முத்தமிழ் நிலையம், வரதா முத்தியப்பன் தெரு, சென்னை 1.]

தங்களைத் தாங்களே தாழ்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு சீரழியும் சிறுமைப்பித்து (Inferiority Complex) தமிழருக்கு மிக உண்டு. அந்தப் பித்தந் தெளிய மருந்தொன்றிருக்குது என்கிருர் முல்லை முத்தையா. சிறுமைப் பித்து தோன்றுவது எதனுல், வளர்வது எத்தகைய சூழ்நிலையில், அதனைத் தொலைப்பது எப்படி என்பனவற்றை நண்பர் முத்தையா தெளிவாக விளக்கி இருக்கிருர் இச்சிறு நூலில். இத்தகைய மனப்பண்பு விளக்கங்கள் இன்றைய தமிழகத்திற்கு மிக மிக அவசியம்.

விற்பனையாளர்கள் தேவை

கீழக்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை:

வந்தவாசி, உத்தம பாளையம், உடுமலைப்பேட்டை, கும்பகோணம், அருப்புக்கோட்டை, செங்கல்பட்டு, சேந்தமங்கலம், பரமகுடி, போளுர், அறந்தாங்கி, வாணியம்பாடி, ஆற்காடு, விருதுநகர், திருவள்ளுர்.

மேனேஜர், 'போர்வாள்'

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உரைத்தது. ஆம்! அதுதான்! பூமி சூரியனைச் சுற்றுகிறதே தவிர சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்ற விஞ்ஞான உண்மையை முதன் முதலாக எடுத்துக் கூறினன். அதற்கு மத குருமாரிடமிருந்து அவன் பெற்ற பரிசே இத் தண்டனை! மதம் எனும் பலி பீடம், மக்கள் மடமையை மாய்த்த அவனைச் சாய்த்திட எண்ணிற்று, சிறையிலே தள்ளிற்று, ஆனல், உண்மை, சிறைக் கதவுகளையுக் தாண்டிக்கொண்டு மக்கள் உள்ளத்திற்குத் தாவிவிட்டது. உண்மையை உரைத்ததற்காக உலகம் அவனைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்தது அன்று; இன்றே தலைசிறந்த விஞ்ஞானி என்று ஏற்றிப் போற்றுகிறது. கலிலியோ மாண்டான்! வாழ்க கலிலியோ!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"சரிசரி! வீட்டுக்கு உடனே மனோரமாவை எடுத்துச் செல்ல வேண்டும்" என்று கூறி, அவளைத் தூக்கித் தன் தோளில் சாய்த்துக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான் சிவன்.

"சிவா! யார் அவன்?"

"எனக்கும்தான் தெரியவில்லை"

"இந்த ஊரில் உனக்குமா எதிரியிருக்கிறான்?"

"எனக்கே புரியவில்லை, கண்ணு!"

மனோரமாவை வீட்டில் கொண்டுபோய், படுக்க வைத்தார்கள். உடனே வைத்தியரை வரவழைத்தனர்.

கண்ணனிடமிருந்து தப்பி ஓடிய முரடன், தோப்பினுள் புகுந்தான். அங்கு ஒளிந்து கொண்டிருந்த கோடீஸ்வர அய்யர், "முட்டாள்! ஆள்தான் கனமாக இருக்கிறாய், பலம் சிறிது கூட கிடையாது! உன்னைப் போய் அழைத்துக்கொண்டு வந்தேனே!" என்று காளிமுத்து வைத் திட்டினார்.

"நானென்னசாமி செய்யறது! இரும்புபோல்இருக்குது அவன் கை; எப்படியாவது பயலைத் தீர்த்து விட்டிருப்பேன், அதற்குள் வேறொருவன் எங்கிருந்தோ வந்து தொலைந்தான்!" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே, மிரண்ட விழிகளோடு காளிமுத்து கூறினான்.

"ரொம்பவும் பலசாலிதான் நீ! பொழுது விடிவதற்குள் பழத்தூருக்குப் போய்விட வேண்டும்! நட!" என்று கூறிக் கொண்டே, அய்யர் வேகமாக கால்களை இழுத்துப் போட்டார்!

தன் அன்பு மகள் மனோரமாவைச் சிவன் சொந்த மனைவியாக்கிக் கொண்டான் என்பதை அறிந்த அன்று, எப்படியாவது அவனை வஞ்சம் தீர்த்துக் கொள்வதாகத் தான் செய்த சபதம் நிறைவேறாது போனதற்காக அய்யர் மனம் படாதபாடு பட்டது.

மற்றொரு தடவை கட்டாயம் பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தால், மனச்சாந்தி பெற நினைத்தார். ஆனால் முடியவில்லை!

எட்டாவது பகுதி

உரிமைப் போராட்டம்

குமார் பழத்தூருக்கு வந்து ஆறு நாட்களாயின. கோபால், உழவர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் குடிசைகளுக்குக் குமாரை அழைத்துச்சென்று, வறுமை நடனம் செய்வதை நேரிலே காணும்படிச்செய்தான். இந்தக் குடிசைகளையும், அவற்றில் வாழ்ந்த மனித பூச்சிக்களையும் காணக்காண, "கலையைவிட்டு இவர்களுக்காகத் தொண்டாற்ற வந்ததுதான் சரி, முற்றும் சரி" என்ற எண்ணம் குமாரின் உள்ளத்தில் பலப்பட்டது

உழவர்கள், தொழிலாளர்கள் அடங்கிய ஒரு பொதுக் கூட்டம் ஒருநாள் கோபாலின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் குமார் பேச ஆரம்பித்தான்:

தலைவர் அவர்களே! தோழர்களே!

உணர்ச்சி ததும்பும் இக் கூட்டத்தில் பேச எழும்போதே என் உள்ளம் ஆநந்தக் கூத்தாடுகிறது. என் மனதில் பொங்கி வழியும் மகிழ்ச்சியைப் பேச்சினால் விளக்கிக் காட்டுமளவிற்கு எனக்குப் பேச்சுக்கலையில் பயிற்சி கிடையாது.

இறந்தான் கணவன் என்று கேள்விப்பட்ட இளம்பெண்ணின் காதுகளில், மணந்தவன் மாளவில்லை உயிரோடே நடமாடுகிறான் என்ற வார்த்தைகள் புகுந்தால், அந்த இளவஞ்சியின் உள்ளம் எவ்வளவு பூரிக்கு... அவ்வளவு பூரிப்படைகிறே... உணர்ச்சியற்று நடைப்பிண... ளாக இருந்த ஏழைகள் இன்... ஆர்வமும், அஞ்சாமை... கொண்டு திரண்டிருப்ப... காண! வாழ்க,வளர்க இவ்வு... ச்சியென்று வாழ்த்துகிறேன்.

ஏழைகள் நாம்! உழைப்பு... தோள்களில்! கவலையும் ஏ... மும் நம் இதயத்தில்! இ... தத்தை வியர்வையாக்கிச் சி... வதும் நாம்! உழைக்கிறோ... ஓய்வின்றி உழைக்கிறோம். உழைப்பில் பிறப்பது செந்நெ... காய்கனிகள், மாடமாளிகை... செல்வம், சகலமும்! ஆனால் உடலைத் தழுவுவது, உள்... தில் சுழலுவது வறுமை, வ... டம்!..........கதிரவனின் கொ... ரத் தாக்குதலையும் பொறுத்... கொண்டு வயல்களில் உ... மண்ணாக்கி உழைக்கின்றோ... ஆழத்திலிருக்கும் நீரை அள்... யள்ளி வார்த்து வயல்க... தேக்குகிறோம். இவ்வள... செய்யும் நம் குடலைப் பட்டி... கசக்குவது சரியா? தங்கத்தை சுரங்கத்திலிருந்து எடுத்... தருகிறோம். தங்கம் தி... னைகள் "தர்மலக்ஷ்மி" என்... பிச்சையேற்பது நீதியா? மூச்... யடக்கி முத்தெடுக்கும் நம் மு... களில் கவலை புன்னகை புரி... முறையா? கைகளால் விறகை... பிளந்து தருகிறோம், ஆ... வேதனை நம் உள்ளத்தை... கோடரியால் பிளக்கிறதே, இ... கொடுமையல்லவா? இவற்... எல்லாம் சகித்துக்கொ... இன்னுமிருப்பது தன்மா... மற்ற கோழைத்தனமல்லவா?..........."

ஆர்வத்தோடும், ஆவே... தோடும், தெளிவோடும் கு... பேசிமுடித்ததும், சிறிது நே... கோபால் பேசினான்.

உரிமைக்காகப் போரி... உத்தமர்கள், வீரர்கள், தி...

ஆகியோரின் வரலாறுகளை
ல்லாம், எடுத்துக் கூறினுன்
பால்.
மார்பில் ஈட்டி பாய்ந்த நேரத்
தும் மனங் கலங்காத மாவீரர்
, தூக்கு மேடையைக்
டு அஞ்சியோடி ஒளி
மல் அதனைக்கண்டு சிரித்துச்
த்த இளஞ்சிங்கங்கள்; மன்
டமிருந்தும் செல்வச்
ருக்கர்களிடமிருந்தும் தூது
த நேரங்களில் தூவெனக்
றியுமிழ்ந்து விட்டு, தன்னை
பிருந்த ஆதரவற்ற மக்க
க்காக அல்லும்பகலும் அய
தளராது உழைத்த தலை
ள், தளபதிகள்; துப்பாக்கி
க்கண்டு நிலைகலங்காத தீரர்
எதிரி தாள்பணியும் வரைக்
போரிடுவேனென்று சூளு
த வெற்றியைக் கண்ட
கள்—இது போல் பற்பல
திகளை யெல்லாம் உணர்ச்சி
டும், வீரத்தோடும் விளக்கிப்
னன் கோபால். அவற்றை
லாம் கேட்ட உழவர்கள்
சியும் வீரமும் பெற்றார்கள்.
ளைக்கு மறுநாள் வரி
இயக்கத்தை ஆரம்பிக்க
!'' என்று கோபால் உரக்
கட்டான்!
ரி! அப்படியே செய்
!'' என்று பதிலளித்தனர்
கள். ,'கோபால் வாழ்க!
வாழ்க!'' என்று முழக்க
னர் மக்கள்.
கொடா இயக்கம் ஆரம்ப
போகிறது என்பதைக்
ப்பட்ட ஜமீன்தார், சுற்
க்கர்களிலிருந்துகுண்டர்
வரவழைத்தார். போலீஸுக்
செய்தியைத் தெரிவித்தார்.
கொடா இயக்கம் ஆரம்ப
வரிகொடுக்க மறுத்த
ளைக் குண்டர்கள் தாக்
பொறுமையோடும்,
போடு மிருந்த ஏழை
கள் கொதித்தெழுந்தார்கள். குண்டர்களின் மேல் புலியைப் போல் பாய்ந்து போரிட்டனர். கூலிக்கு வந்த குண்டர்கள், உரிமைக்காகப் போரிடும் ஏழைகளின் கனல் கக்கும் கண்களுக்கும், அரிவாள் ஏந்திய கைகளுக்கும் முன்நிற்க தைரியமில்லாமல் ஓடினர்!

செய்தியைச் செவியுற்ற ஜமீன்தார் மிரண்டார்.

"போலீஸ் வந்தால் நிலைமை சரியாய்ப் போய்விடும்! துப்பாக்கியைக் கண்டால் காகங்களைப் போலப் பறந்துவிடும் இதுகள்!" என்று ஆறுதல் கூறினர் அய்யர்.

"அய்யரே! நான் ஒன்று சொல்லுகிறேன், அதன்படிச் செய்கிறீரா?"

"சொல்லுங்கள் ஜமீன்தார் வாள்!"

"இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால், நம் வீட்டையும் தாக்கினாலும் தாக்குவார்கள். இரவும் வந்துவிட்டது, போலீஸும் இன்னும் வரவில்லை. இந்தா.. இப்படி இந்த அறையினுள்ளே வாரும்.........இதோ இந்தப் பெட்டி நிறைய நகைகளிருக்கின்றன! இதை உடனே எடுத்துச் சென்று கோயிலில் பத்திரப் படுத்தி வையும்! கிளர்ச்சி அடங்கியதும் வாங்கிக் கொள்கிறேன்!"

"ஆஹா! அதற்கென்ன! பேஷா செய்றேன்! நோக்கும் இதுதான் சரின்னு படறது!"

இரண்டு நாள் சாப்பிடாதவன் எதிரில் நீண்ட தலைவாழை இலை நிறைய சோறும், சுவை நிறைந்த பதார்த்தங்களும் படைத்து, சாப்பிடு என்றால், அவன் கண்களில் எவ்வளவு மகிழ்ச்சி தோன்றுமோ அவ்வளவு மகிழ்ச்சி தோன்றியது அய்யரின விஷம் கக்கும் கண்களில்! மனோரமா அவர் கண்முன் தோன்றி மறைந்தாள்!

மறுநாள் காலை குடியானவர்கள் ஜமீன்தார் வீட்டின்முன் கூட்டம் கூட்டமாகக் கூடினர்கள். வரியைக் குறைக்கும்படி கோஷமிட்டனர். கோபால் அவர்களை அமைதியாக இருக்கும்படிக் கூறிவிட்டு, ஜமீன்தாரைக் கண்டு நிலைமையை நேரில் விளக்கிக்கூற வீட்டினுள் குமாருடன் சென்றான். முதலில் காவற்காரன் உள்ளே அனுமதிக்க மறுத்தான். பிறகு கூட்டத்தைக் கண்டு பயந்து பேசாமலிருந்து விட்டான். இருவரும் உள்ளே சென்றனர்.

இதற்குள் பல வண்டிகளில் போலீஸ் வந்து விட்டது. அமைதியாக இருந்த கூட்டத்தைப் பலவந்தமாக விரட்டினர் போலீஸார். குடியானவர்கள் கலைய மறுக்கவே தடியடிப் பிரயோகம் நடைபெற்றது! உழவர்கள் பின்னுக்கு ஓடுவதும் திரும்பவும் முன்னுக்கு விரைந்து வருவதுமாக இருந்தனர். இன்ஸ்பெக்டர் இதயநாதன் ஜமீன்தாரைக்காண உள்ளே சென்றார்.

யாரோ வரும் காலடிச் சப்தத்தைக் கேட்டதும், கோபாலும் குமாரும் ஜமீன்தார் அறையை விட்டுத் தோட்டத்தின் வழியாக ஓடினர். இன்ஸ்பெக்டர் அறையினுள் நுழைந்தார். நுழைந்ததும் அவர் திடுக்கிட்டு அசைவற்று நின்றுவிட்டார். அவர் கண்கள் விரிந்தன! ஜமீன்தார் கட்டிலின் மேல் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்! அறை முழுவதும் இரத்தம் உறைந்திருந்தது!

இன்ஸ்பெக்டர் இருதயநாதன் வெளியே ஓடிவந்தார். "கொலை! கொலை! பிடியுங்கள்!" என்று கத்தினர், சுடும்படி உத்தரவிட்டார், போலீஸார் சுட்டனர். சிலர் இறந்தனர். பலர் கைதியாயினர்!

(தொடரும்)

தொடர்கதை:

[முன்பு:—மனோரமா, கணவன் சிவனுடன், குளக்கரையில், இன்பமாக உரையாடிக் கொண்டிருக்கும் போது, யாரோ வரும் காலடிச்சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் ஐயோ என அலறுகிறாள். சிவன் திடுக்கிட்டு எழுகிறான். பிறகு......]

முரட்டுத் தோற்றமும், உயர்ந்த உடலும் கொண்ட ஒருவன் அவனை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கத்தி இருந்தது. கத்தி நிலவொளியில் "பளிச் பளிச்" என்று பிரகாசித்தது.

"யார் நீ?" என்று அதட்டிக் கேட்டான் சிவன்.

"நானா யார்? இதோ இன்னும் சற்று நேரத்தில் தெரிகிறது!" என்று கூறிக்கொண்டே, கத்தியினால் குத்த விரைந்து வந்தான்.

பயத்தினால், மனோரமாவின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. காண்பது கனவுதானா என்றுகூட அவள் எண்ணினாள். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தாள். அவளது அச்சம் நொடிக்கு நொடி அதிகமாகிக் கொண்டே போயிற்று. இந்த நேரத்தில் தான் என்ன செய்தால், தன் கணவனை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியுமென்று யோசிக்கக்கூட அவளால் முடியவில்லை.

முரடன் அருகில் வந்து, கத்தியை ஓங்கினான் குத்த! ஓங்கிய கரத்தை, திறமையோடும், வலிவோடும் பிடித்துக் கொண்டான் சிவன். வந்தவன் தன்னால் முடிந்தமட்டும் தன் கையை விடுவித்து, வந்த காரியத்தை முடிக்க முயன்றான். சிவன் பற்களைக் கெட்டியாகக் கடித்துக்கொண்டு, ஆவேசத்தோடு காணப்பட்டான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. வேகமாக ஒரு கையால் முரடனின் வயிற்றில் ஓங்கிக் குத்தினான். வலிதாங்க முடியாமல் கத்தினான் வந்தவன். உடனே அவன் கையிலிருந்த கத்தி நழுவி, கீழே விழுந்துவிட்டது. இருவரும் யார் முதலில் கத்தியை எடுப்பது என்ற போராட்டத்தில் ஈடுபட்டனர். மனோரமா, கீழே கிடக்கும் கத்தியை எடுத்து, குளத்தில் எறிந்துவிட

(5-ம் பக்கம் பார்க்க)

அச்சில்!

அறிஞர்
அண்ணாவின்
ரேடியோ பேச்சு

தீண்டாமை 0-
சமதர்மம் 0-
வாலிபர் தேவை 0-
மேடைப் பேச்சு 0-
காந்தி 0-

வியாபாரிகளுக்கு 20/
10 அணா தபால் தலை அ
வோருக்கு ஐந்து புத்தக
ளும் தபாற் செலவி
அனுப்பப்படும். 0-
தபால்தலை அனுப்புவோ
ஒரு புத்தகம் அனுப்பப்

திராவிடப் பண்

தெப்பக்குளம் ::

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli
atFree Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B. A.